


## சட்டப்பேரவைத் தேர்தல்! “நமது மக்கள் முன்னேற்றக் கழகம்”

# பிஎல்ஏ ஜெகநாத் மிஸ்ரா - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து ஆதரவு!

### அமைச்சர் கே.என்.நேரு – ஆர்.எஸ்.பாரதி – தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. உடனிருந்தனர்!



சென்னை, டிச. 25 -

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை “நமது மக்கள் முன்னேற்றக் கழகம்” கட்சியின் நிறுவனத்தலைவர் பிஎல்ஏ. ஜெகநாத் மிஸ்ரா மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து தி.மு.கழகத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை சென்னை, அண்ணா அறிவா லயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (23-12-2025) காலை, நமது மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நிறுவனத் தலைவர் பிஎல்ஏ. ஜெகநாத்மிஸ்ரா மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து எதிர்வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில், தி.மு.கழகத்திற்கும் - அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் ஆதரவு தெரிவித்தனர்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன், எம்.பி., ஆகியோர் உடனிருந்தனர்.



சாக்கோட்டை ஒன்றியத்தில் முன்னாள் அமைச்சர் தென்னவன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முன்னிலை சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி மற்றும் சின்ன துரை ஆனந்த், பள்ளத்தூர் ரவி, துணை மேயர் குணசேகரன், நகர செயலாளர் அலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

